2022 அக்டோபர் 18]

(ஊ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, 2021–2023 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் ஐந்தாவது முதல் பன்னிரெண்டாவது வரையிலான 8 அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.